DINAKARAN

PAGE NO: 14 DATE: 12.04.2023

# புதுவை பல்கலையில் வெப் 3 சங்க பட்டறை




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த வெப் 3 சங்க பட்டறையில் தொழில்நுட்ப வல்லுநர்கள் பேசினர்.

## தொழில்நுட்ப வல்லுநர்கள் பங்கேற்பு

**புதுச்சேரி, ஏப். 12:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ராமானுஜன் கணித அறிவியல் பள்ளி மற்றும் கணினி அறிவியல் துறை இணைந்து ஜூடான்ஸ் டெக் மற்றும் தி ஃபீனிக்ஸ் கில்ட் சென்னை அத்தியாயம் வெப் 3 சங்கம் பட்டறை நடத்தியது. புதுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்துகொண்டு அதிநவீன தொழில்நுட்பங்களின் சமீபத்திய போக்குகள் பற்றி விவாதித்தனர். ஜூடான்ஸ் டெக் என்பது லாப நோக்கற்ற தொழில்நுட்ப அமைப்பாகும். இது மாணவர்களுக்கும், தொழில்துறையினருக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும்.

இவை புதுச்சேரி உட்பட இந்தியா முழுவதும் 40 சந்திப்புகளை ஏற்பாடு செய்கிறது.

வெப் 3 சங்கம் மற்றும் பிளாக் செயின் பற்றிய அறிவை மாணவர்களிடையே பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது வெப் 3ல் பெண் மற்றும் பைனரி அல்லாத பில்டர்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

அவர்கள் வெப் 3 நெறிமுறைகள் மற்றும் நிறுவனங்களுடன் மிக நெருக்கமாக வேலை செய்து, ஹேக்கர் வீடுகள், பட்டறைகள் மற்றும் பூட் கேம்ப்கள் போன்ற நிகழ்வுகளை நடத்துகிறார்கள். இந்நிகழ்ச்சியில் புதுச்சேரியில் உள்ள பல்வேறு கல்லூரி மாணவர்களுக்கு பிளாக்செயின் தொழில்நுட்பம் மற்றும் வெப் 3 அறிமுகம் செய்யப்பட்டது. டாக்டர் ராஜேஸ்வரி சேஷாத்ரி, டாக்டர் சித்ரலேகா, ஜூடான்ஸ் டெக்கின் தலைமை நிர்வாக அதிகாரி மோஹித் ஷர்மா, ஓவியா சேஷாத்ரி, சிவம் ஸ்ரீவஸ்தவா மற்றும் சித்தார்த்தா பட்டாச்சார்ஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

"MALAI MALAR"

DATE : 12-04-2023

PAGE NO: 02



# சமுதாய கல்லூரியில் பிலிம் கிளப் தொடக்கம்

புதுச்சேரி,ஏப்.12—

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் பிலிம் கிளப் தொடங்கப்பட்டது.

நடிகர் ஆடுகளம் முருகதாஸ் திறந்து வைத்தார். புதுவையில் உள்ள பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த விஷுவல் கம்யூனிகேஷன் துறை மாணவர்கள் பங்கேற்றனர். விழாவில் தமிழ்த்துறை உதவி பேராசிரியர் மாலதி வரவேற்றார். பிலிம் கிளப் நோக்கம் குறித்து உதவி பேராசிரியர் சுரேஷ்குமார் விளக்கினார். உதவி பேராசிரியர் தங்கள் நன்றி கூறினார். துறை உதவி பேராசிரியை கிருத்திகாக நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.